## சுருக்கம்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் – மத்திய அரசிடமிருந்து கிடைத்த மானியம் - அரசுக் கணக்கில் செலுத்தும் வரை பெறப்பட்ட வட்டித் தொகை - அரசுக் கணக்கில் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் மற்றும் அத்தொகையினை நிறுவனத்தால் நடத்தப்பட்ட பயிற்சிகளுக்கு செலவிடப்பட்டது – பின்னேற்பு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா–3)த் துறை

அரசாணை (ப) எண். 605 நாள்: 30.11.2010

படிக்கப்பட்டவை:

1. இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், மறைமலைநகர் கடித ந.க.எண்.472/2004/அ.3/ நாள் 02.08.2004

2. இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம், மறைமலை நகர் கடித ந.க.எண். 343/2003/அ.3, நாள் 12.08.2010

----

ஆணை:

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் (State Institute of Rural Development) செயல்பாடுகளுக்காக மாநில அரசு ஆண்டுதோறும் வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து, மான்யம் வழங்கிவருகிறது. அண்மைக்காலமாக மத்திய அரசு, மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் செயல்பாடுகளுக்காக, சில இனங்களில் செய்யப்படும் செலவில் 50 சதவீத அளவிற்கு மான்யம் வழங்கி வருகிறது. இவ்வாறு மத்திய அரசால் 2004 - 2005ஆம் ஆண்டிற்காக 50% மான்யத் தொகையாக ரூ. 33,49,000 (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரம் மட்டும்) மாநில ஊரகவளர்ச்சி நிறுவனத்திற்கு கிடைத்துள்ளதாகவும், இந்நிறுவனத்திற்கு மாநில அரசு ஏற்கனவே நிதிஉதவி வழங்கி வருவதால் மத்திய அரசிடமிருந்து கிடைத்துள்ள 50% நிதியுதவியை மாநில அரசின் கணக்கில் கட்ட

(த.பி.பார்)

உரிய கணக்குத் தலைப்பினைத் தெரிவிக்குமாறு மேலே படிக்கப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் அரசினை கேட்டுக் கொண்டார்.

2. இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் அவர்களது கோரிக்கையைப் பரிசீலித்து மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ள மான்யத் தொகை, மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் வைத்திருந்ததால், அத்தொகையின் மீது பெறப்பட்ட வட்டித் தொகையும் சேர்த்து அரசின் குறிப்பிட்ட கணக்குத் தலைப்பின் கீழ் திரும்ப செலுத்திடுமாறு அறிவுறுத்தப்பட்டது.

3. இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் 2001 - 2002, 2002 - 03, 2003 - 04 மற்றும் 2004- 05 ஆம் ஆண்டுகளில் கிடைத்த மத்திய அரசின் 50சதவிகித மான்யத் தொகை மற்றும் அதற்காக கிடைத்த வட்டி விபரம் பின்வருமாறு எனத் தெரிவித்தார்.

| ஆண்டு | மானியத் தொகை | வட்டித் தொகை |
|---|---|---|
| 2001 – 02 மற்றும் 2002 – 03 | 62,86,000 | 6,64,371 |
| 2003 – 04 | 31,53,000 | 1,87,476 |
| 2004 – 05 | 33,49,000 | 1,33,129 |
| | மொத்தம் | 9,84,976 |

4. மேலும் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் நிதி பற்றாக்குறை இருந்ததாலும், நிறுவன பயிற்சிகள் நடத்திட நிதி ஒதுக்கீடு ஏதும் அரசிடமிருந்து பெறப்படவில்லை என்பதாலும் மேற்படி வட்டி தொகையினை அந்நிறுவனம் மூலம் நடத்தப்பட்ட பயிற்சிகளுக்காக செலவிடப்பட்டது எனத் தெரிவித்து வட்டித் தொகையை திரும்பக்கட்டுவதிலிருந்து விலக்களிக்குமாறும், பயிற்சிகளுக்காக, இத்தொகையைச் செலவிட்ட தனது செயலுக்கு பின்னேற்பு வழங்குமாறும் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவன இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆராய்ந்து, அதனை ஏற்கலாமென முடிவு செய்து மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் 2001 – 02 லிருந்து 2004 – 05 வரையிலான காலத்தில் மத்திய அரசால் வழங்கப்பட்ட மான்யத் தொகையை அரசுக் கணக்கில் செலுத்தும்வரை,

(த.பி.பார்)

ஈட்டிய வட்டித் தொகையான ரூ.9,84,976/–ஐ, (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பத்தி நான்காயிரத்து தொள்ளயிரத்து எழுபத்தி ஆறு மட்டும்) பயிற்சிகளுக்காக செலவழிக்கப்பட்டதற்கு பின்னேற்பு வழங்கியும் மேற்படி வட்டித் தொகையை திரும்ப அரசுக்கு செலுத்துவதிலிருந்து விலக்களித்தும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

6. இவ்வாணை நிதித்துறை அ.சா.கு. எண். 67803/நிதி (ஊ.வ)/2010, நாள் 25.11.10ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

இயக்குநர்,
மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம்,
மறைமலைநகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

இயக்குநர்,
ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்கம்,
சென்னை -15.

மாநில கணக்காயர்
சென்னை -18/35.

<u>நகல்</u>
நிதித் (ஊ.வ) துறை
சென்னை -15.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பி. ராஜேந்திரன்
பிரிவு அலுவலர்.